# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**


## June 21, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமெரிக்காவின் கடும் பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ளும் கியூபாவில், சோஷலிச பொருளாதாரத்தில் மாற்றங்களைப் புகுத்தி பல்வேறு துறைகளைத் தனியார்மயமாக்குவதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க மசோதாவுக்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒருமனதாக ஒப்புதல் அளித்துள்ளது.

(i) கடந்த 1959-இல் ஃபிடல் காஸ்ட்ரோ தலைமையில் நடைபெற்ற புரட்சிக்குப் பிறகு, அந்நாட்டின் சோஷலிச கொள்கையில் ஏற்படுத்தப்படும் மிகப்பெரிய திருத்தமாகவும், சந்தைப் பொருளாதாரத்தை நோக்கிய முக்கிய நகர்வாகவும் இது பார்க்கப்படுகிறது.

(ii) அமெரிக்காவின் தடைகள், எண்ணெய் விநியோக முடக்கம் மற்றும் சுற்றுலாத் துறையின் வீழ்ச்சி ஆகியவை அந்நாட்டைப் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கின. இலவச கல்வி, மருத்துவம் போன்ற மானிய சேவைகள் பொருளாதாரச் சரிவினால் முடங்கியுள்ளன.

(iii) இச்சூழலில், கியூபாவில் முதன்முறையாக தனியார்மயமாக்கலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசு நிறுவனங்கள், பங்குகள் மற்றும் முதலீடுகளைக் கொண்ட தனியார் வர்த்தக நிறுவனங்களாக மாற்றப்படவுள்ளன.

(iv) தனியார் நிறுவனங்கள் 100-க்கும் மேற்பட்ட ஊழியர்களைப் பணியமர்த்தவும், ஒருவரே ஒன்றுக்கும் மேற்பட்ட தொழில்களைத் தொடங்கவும் முதன்முறையாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் (என்எஸ்ஏ) மாநாடு புது தில்லியில் திங்கள்கிழமை (ஜூன் 22) தொடங்குகிறது.

(i) இரு நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டுக்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல் தலைமை வகிக்கிறார். மாநாட்டில் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி பங்கேற்பதாக அந்நாடு உறுதிப்படுத்தியது. இதையடுத்து, அஜீத் தோவலை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து வாங் யி ஆலோசிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) மாநாட்டில் ஈரான் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் துணைச்செயலர் நிஜாமிபூர் உள்பட உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர். உக்ரைன் போர், பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் மோதல் உள்ளிட்ட விவகாரங்கள் விவாதிக்கப்பட வாய்ப்புள்ளது. குறிப்பாக ஜம்மு-காஷ்மீரை குறிவைத்து பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்தும் தாக்குதல்களை சுட்டிக்காட்டி இந்தியா கண்டனம் தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) இந்தியா சீனா, ரஷியா உள்ளிட்ட 11 நாடுகளை உறுப்பினராகக் கொண்ட பிரிக்ஸ் கூட்டமைப்புக்கு நிகழாண்டு இந்தியா தலைமை தாங்குகிறது. இதன் ஒரு பகுதியாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் மாநாடு நடைபெறுகிறது.

3. நிலையான அளவு கலவையில் (எஃப்டிசி) தயாரிக்கப்படும் 16 மருந்துகளை உற்பத்தி செய்யவும், விற்கவும், விநியோகிக்கவும் தடை விதித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

(i) மருத்துவ ரீதியான நியாயப்படுத்துதல் இல்லாததாலும், அதன் தொடர்ச்சியான பயன்பாடு பயனுள்ளதாகக் கருதப்படாததாலும், சாத்தியமான பக்கவிளை வுகளைக் கருத்தில் கொண்டும் மருந்துகள் மற்றும் அழகுசாதனங்கள் சட்டம் 1940-இன் பிரிவு 26ஏ-இன் கீழ் இந்தத் தடை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(ii) கலவை நிலையான அளவு மருந்துகள் (எஃப்டிசி) என்பது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வீரியமிக்க மருந்துப் பொருள்களை ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் உள்ளடக்கிய கலவையாகும். இதுகுறித்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

- உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளின் அடிப்படையில் எஃப்டிசி மருந்துகளை ஆய்வு செய்யவும், மருத்துவ ரீதியாக நியாயமற்ற அல்லது தீங்கு விளைவிக்கக் கூடிய மருந்து கலவைகளைக் கண்டறியவும் மருந்துத் தொழில்நுட்ப ஆலோசனை வாரியம் (டிடிஏபி) சார்பில் நிபுணர் குழு அமைக்கப்பட்டது.

- இந்த நிபுணர் குழு அளித்தப் பரிந்துரைகளின் அடிப்படையில், 16 எஃப்டிசி மருந்துகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகத்தை நாடு முழுவதும் உடனடியாகத் தடை செய்ய முடிவு செய்யப்பட்டது. மருத்துவ ரீதியான நியாயப்படுத்துதல் இல்லாததாலும், அதன் தொடர்ச்சியான பயன்பாடு பயனுள்ளதாகக் கருதப்படாததாலும், சாத்தியமான பக்கவிளைவுகளைக் கருத்தில் கொண்டும் இந்தத் தடை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவை, தோல் தொடர்பான மருந்துகள், வலி நிவாரணிகள், தசைத் தளர்வு மருந்துகள், நுண்ணுயில் எதிர்ப்பு சார்ந்த கலவைகள் உள்பட பல்வேறு சிகிச்சை வகைகளைச் சாந்தவையாகும்.

(iii) தடை செய்யப்பட்ட மருந்து கலவைகள்:

- எத்தோஹெப்டசீனுடன் கூடிய அசிடைல் சாலிசிலிக் அமிலம்; டைசைக்ளோமின், பாராசிட்டமால் மற்றும் கிளிடினியம் புரோமைடு; டைசைக் ளோமின், பாராசிட்டமால், கிளிடினியம் புரோமைடு மற்றும் குளோர்டயா செபாக்ஸைடு; குரோமியம் பிக்கோலினேட்டுடன் கூடிய கிளிகிளாசைடு; லிக்னோகெய்னுடன் கூடிய பாரிசிட்டமால் உள்ளிட்ட கலவை மருந்துகள் தடை செய்யப்பட்டுள்ளன.

- அமாக்ஸிசிலினுடன் கூடிய செராட்டியோபெப்டிடேஸ்; அமாக்ஸிசிலினுடன் செராட் டியோபெப்டிடேஸ் மற்றும் லாக்டோபேசிலஸ் ஸ்போரோ ஜென்ஸ்; அமோக்ஸிசிலினுடன் கூடிய க்ளோக்ஸாசிலின்; லாக்டிக் அமிலம் பேசில்லஸ் மற்றும் செராட்டியோபெப்டி டேஸ்; செஃபட்ராக்ஸிலுடன் கூடிய புரோபெனெசிட்; செஃபு ராக்ஸைமுடன் கூடிய செராட்டியோபெப்டிடேஸ் உள்ளிட்ட பல நுண்ணுயிர் எதிர்ப்பி (ஆன்டிபயாடிக்) அடிப்படையிலான மருந்து கலவைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

(iv) சரும அழகு சாதனங்கள்:

- மருந்துகள் தவிர, மேலும், வைட்டமின் இ, ஜோஜோபா எண்ணெய், ஆரஞ்சு எண்ணெய், கோதுமை கிருமி எண்ணெய், டீ ட்ரீ ஆயில், அலன்டோயின் மற்றும் டி-பாந்தெனோல் உள்ளிட்ட பொருட்களுடன் கற்றாழை அல்லது கற்றாழை சாற்றின் கலவைகள் கொண்ட பல சருமம் மற்றும் சரும பராமரிப்பு கலவைகளும் தடைசெய்யப்பட்டுள்ளன.
- இந்த தடை அறிவிக்கை தீவிரமாக நடைமுறைப் படுத்தப்படுவதை உறுதிப்படுத்துமாறு அனைத்து மாநிலமருந்து கட்டுப்பாட்டாளர்கள், ஒழுங்காற்று ஆணையங்கள் மற்றும் சட்ட அமலாக்க முகமைகளும் அறிவுறுத்தப்படுகின்றன.
- மருந்து உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோ கஸ்தர்களும் சட்டத்துக்கு உட்பட்டு தேவையான திருத்த நடவடிக்கையை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

4. மேக்கேதாட்டு அணை இரு மாநிலங்களுக்கும் பலனளிக்கும்; அணை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கைக்கு காவிரி நீர் ஒழுங்காற்று ஆணையம் ஒப்புதல் அளித்ததும் அடுத்தக் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கர்நாடக நீர்வளத் துறை அமைச்சர் ராமலிங்க ரெட்டி தெரிவித்தார்.

(i) மேலும், 'இந்த விவகாரத்துக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதே சிறந்தது; தமிழகத்துடன் பேச்சுவார்த்தை நடத்த கர்நாடகம் தயாராக உள்ளது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ii) காவிரியின் குறுக்கே மேக்கேதாட்டில் அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அணையை கட்டுவதற்கான அனுமதியை மத்திய அரசு அளிக்கக் கூடாது என வலியுறுத்தியும் தமிழக சட்டப் பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழக அரசின் இந்த நிலைப்பாடு தொடர்பாக, கர்நாடக நீர்வளத் துறை அமைச்சர் ராம லிங்க ரெட்டி பெங்களூரில் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை கூறியதாவது:

- மேக்கேதாட்டில் ஏற்கெனவே அணை கட்டப்பட்டு, அங்கு நீர் தேக்கி வைக்கப்பட்டிருந்தால், மழைப்பொழிவு இல்லாத நிலையிலும் கூட

தமிழகத்துக்கு தண்ணீரை திறந்திருக்க முடியும். இது, நமது குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, மாதந்தோறும் தமிழகத்துக்கான நீரை திறப்பதன் மூலம் அங்குள்ள விவசாயிகளும் பலனடைவர். இரு மாநிலங்களுக்கும் பலன் தரக்கூடிய திட்டத்தை எதிர்ப்பதால் தங்களின் சொந்த விவசாயிகளுக்கே அவர்கள், இடர்ப்பாட்டை உருவாக்குகின்றனர்.

(iii) ஒப்புதலுக்குப்பின் அடுத்தகட்ட நடவடிக்கை:

- மேக்கேதாட்டு அணை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, காவிரி நீர் ஒழுங்காற்று ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சில திருத்தங்களைப் பரிந்துரைத்துள்ளனர். அவர்களின் ஒப்புதல் கிடைத்தவுடன், அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- மேக்கேதாட்டு அணை திட்டம் நீர் சேமிப்புக்கானதே அன்றி நீர்ப்பாசனத்துக்கானது அல்ல. இது எங்களின் லட்சியத் திட்டம்; சாதாரண நீர் சேமிப்பு அணை மட்டுமே. இதன் மூலம் பெங்களூருக்கு 4.75 டிஎம்சி குடிநீரை வழங்குவதுடன் 40 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். நீர்ப்பாசனத்துக்காக அணை நீர் வழங்கப்படாது.

- காவிரியில் தனக்கு ஒதுக்கப்பட்ட பங்கையே கர்நாடகம் கோருகிறது; மாறாக, தமிழகத்துக்கான ஒதுக்கீட்டில் இருந்து ஒரு துளி கூட வேண்டாம். எங்களுக்கு இந்த விவகாரத்தில் தமிழகம் ஏற்கெனவே மேற்கொண்ட சட்டரீதியிலான போராட்டங்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. இருப்பினும், அணைக்கு எதிரான சட்டப் போராட்டம் தொடரும் என கூறுகின்றனர்.

(iv) பேச்சு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு:

- இந்த விவகாரத்துக்கு வார்த்தை மூலம் தீர்வு காண்பதே சிறந்தது. அனைத்து விஷயங்களுக்கும் நீதிமன்றத்தை நாடினால் என்ன நிகழும்? ஆண்டுக்கணக்கில் இழுத்தடித்துக்கொண்டே செல்லும்.

- கிருஷ்ணா நதி நீர் விவகாரத்தில் அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. மூன்று மாநிலங்கள் நீதிமன்றத்தை நாடியுள்ளன. இந்த வேகத்தில் சென்றால், பிரச்னைக்கு தீர்வு கிடைக்க 2050 வரை கூட ஆகலாம்.

- மேக்கேதாட்டு அணை விவகாரத் தில்தமிழகத்துடன் பேச்சுவார்த்தை நடத்த கர்நாடகம் தயாராக உள்ளது.

- கர்நாடகத்தின் உரிமையைப் பாதுகாப்பதில் பாஜக, மதச்சார்பற்ற ஜனதா தளம் என அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். தற்போதைய சூழலில், காவிரி அணைகளான கிருஷ்ணராஜ சாகரில் 11 டிஎம்சியும், கபினியில் 5 டிஎம்சியும்தான் நீர்இருப்பு உள்ளது என்றார் அவர்.

5. ஆவது சர்வதேச யோகா தினம் ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 21) கொண்டாடப் பட

இருப்பதையொட்டி, பிரதமர் நரேந்திர மோடியுடன் சேர்ந்து யோகாசனம் மேற்கொள்ள 6 லட்சம் அமைப்புகள் தங்களது பெயரை பதிவு செய்துள்ளன.

(i) இந்தியாவின் முயற்சியின்பேரில் ஐ.நா. சபையால் கடந்த 2014- ஆம் ஆண்டு யோகா அங்கீகரிக்கப்பட்டது. பிறகு ஆண்டுதோறும் ஜூன் மாதம் 21-ஆம் தேதி சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படும் என ஐ.நா. சபை அறிவித்தது.

(ii) அதன்படி, உலகம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 21) சர்வதேச யோகா தினம் ‘ஆரோக்கியமான முதுமைக்கான யோகா’ என்ற கருப்பொருளில் கொண்டாடப்படவுள்ளது.

6. பிற நாடுகளின் குப்பை கொட்டும் இடமாக இந்தியாவை மாற்ற அனுமதிக்க முடியாது என சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வு கண்டிப்புடன் தெரிவித்தது. விருதுநகர் மாவட்டம், சிவகாசியைச் சேர்ந்த ஸ்ரீபதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

(i) சிவகாசியில் கைவினைப் பொருள்களுக்கான காகிதங்கள், அலங்கார காகிதங்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறோம். எங்கள் நிறுவனத்துக்குத் தேவையான காகிதங்களை கனடா, அமெரிக்கா, சிங்கப்பூரி லிருந்து இறக்குமதி செய்து வருகிறோம். இந்தக் காகிதங்களில் பெரும்பாலானவை கழிவுக் காகிதங்களாகவே உள்ளன.

(ii) இதை சுங்கத் துறை, தமிழ் நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அப்போது, இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளில் பயன்படுத்தப்பட்ட நெகிழிப்புட்டிகள், கண்ணாடி துண்டுகள், உணவுக் கழிவுகள், நகராட்சி திடக்கழிவுகள் கலந்திருப்பது தெரியவந்தது.

(iii) இதையடுத்து, சரக்குகளை சுங்கத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து அபராதம் விதித்தனர். மேலும், இவற்றை சம்பந்தப்பட்ட நாடுகளுக்கே திருப்பி அனுப்பவும் உத்தரவிட்டனர்.

(iv) எங்கள் நிறுவனத்துக்காக இறக்குமதி செய்யப்பட்ட கழிவுப் பொருள்களை துபைக்கு மீள் ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டும். அல்லது இந்தியாவிலேயே மறு சுழற்சி செய்ய அல்லது கழிவுகளை அழிக்க அனுமதிக்க வேண்டும் என அவர் கோரினார். இந்த மனுவை விசாரித்த உயர்நீ திமன்ற நீதிபதி டி. பரதசக்கரவர்த்தி பிறப்பித்த உத்தரவு:

- ஒரு நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளை மீண்டும் அதே நாட்டுக்குத் தான் அனுப்ப வேண்டும். இதை விடுத்து வேறொரு நாட்டுக்கு அனுப்புவது அரசமைப்புச் சட்டத்துக்கும், சர்வதேச உடன்படிக்கை நோக்கத்துக்கும் முரணானது.
- பொதுவாக, வளர்ந்த நாடுகள் தங்களின் கழிவுகளை வளர்ந்து வரும் நாடுகளில் கொட்டும் நடைமுறை கழிவு காலனித்துவம் எனக்

குறிப்பிடப்படுகிறது. இந்த வகையில், பிற நாடுகளின் குப்பை கொட்டும் இடமாக இந்தியாவை மாற்ற அனுமதிக்க முடியாது. ஒரு சட்டவிரோதத்தை மற்றொரு சட்டவிரோதத்தின் மூலம் சரிசெய்ய முடியாது. இந்தியாவிலேயே இந்தக் கழிவுகளை அழிக்க அனுமதிப்பது பொது கொள்கைக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நோக்கத்துக்கும் எதிரானது.

- மனுதாரர் கோரிய நிவாரணத்தின்படி, கழிவுகளை துபைக்கு மீள் ஏற்றுமதி செய்யவோ அல்லது இந்தியாவிலேயே அழிக்கவோ அனுமதிக்க முடியாது. இந்தக் கழிவுகள் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கே மீண்டும் அனுப்பப்பட வேண்டும். வழக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது என்றார் நீதிபதி.